Chundikuli Branch Library

Y-M-C-A

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Pepoles Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 04 | [17-04-93] | சனிக்கிழமை | ஓசை 58

## கப்பல்பொருள்களிறக்க அதிகாரிகள் அசிரத்தை

யாழ். குடாநாட்டிற்கு கப்பல் மூலம் ஏற்றிவரப்படும் அத்தியாவசியப் பொருள்களை இறக்குவதில் சில செயலக அதிகாரிகளின் அசிரத்தை காரணமாக தாமதமடைவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். இவ்வாறான கால தாமதத்தால் குறிப்பிட்ட கப்பல்களின் சேவையை முற்றுமுழுதாகப் பயன்படுத்த முடியவில்லை என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். பருத்தித்துறை துறைமுகத்தில் குமாரி கப்பலில் இருந்து சராசரி 663 (4ஆம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்சினை தீர்வுக்கு சர்வதேச உதவி அவசியம்

## ஜேர்மன் பா. உ. வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினைக்கு தனித்து நின்று தீர்வு காணமுடியாது. சர்வதேச சமூகத்துடன் அவற்றை பரிமாறிக்கொள்ள வேண்டும் என ஜேர்மன் பாராளுமன்ற வெளிவிவகாரக் குழுத் தலைவரும் ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி கிளார்க்ஸன் வலியுறுத்தியுள்ளார்,

சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் விளங்கும் இவர் தற்போது கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளார். நேற்று மாலை கொழும்பில் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய கலாநிதி கிளார்க்ஸன் இனப்பிரச்சினையை தீர்க்க தற்போது சிறப்பான சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜேர்மனியில் இலங்கை அகதிகள தஞ்சம் கோருவது குறித்து கருத்து தெரிவித்த அவர் பெரும்பாலான அகதிகள் அரசியல் அகதிகளல்ல, சிறந்த வாழ்க்கையை வாழ விரும்புபவர்களே அவர்கள் எனக் கூறினார். இச் செய்தியாளர் மாநாட்டில் சிறிலங்காவிற்கான ஜேர்மனி தூதுவரும் [ 4 ஆம் பக்கம் பார்க்க ]

### அன்னைபூபதி நினைவு உண்ணா விரதம்


அன்னை பூபதி நினைவு உண்ணாவிரதம் இன்று காலை 7.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை யாழ். இந்துக்கல்லூரி, கொடிகாமம் சுட்டிபுரம் அம்மன் கோவில், புலோப்பளை கிழக்கு அ. த. க. பாடசாலை, உடுப்பிட்டி சந்திப் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் இடம்பெறும்.

சிரமதானப் பணியாக நல்லூர்வட்ட மக்களால் மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவு செய்யப்படும்.

★ ★

### உண்ணா விரதமும் ஊர்வலமும்

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை ரீகன் நகரிலிருந்து மக்கள், இந்துக் கல்லூரி வரை காலை 6-30 மணியளவில் ஊர்வலமாகச் செல்ல உள்ளதுடன் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் உண்ணாவிரதமும் இருக்கவுள்ளனர். இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர் புச்சாரா விமானத் தாக்குதலில் பலியானதைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட தொண்டர்களில் ஒரு பகுதியினர்.

# இனப்பிரச்சினையை தீர்க்க இந்தியா முயலவேண்டும்

## இந்திய பத்திரிகையாளர் தெரிவிப்பு

ராஜீவ்காந்தி படுகொலையை காரணம் காட்டி இலங்கைத் தமிழரது துயரங்களை கண்டு கொள்ளாது இருப்பது சரியல்ல என பிரபல இந்திய பத்திரிகையாளர் குல்தீப் நயார் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இலங்கை பிரச்சினையை தீர்க்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்றும் நயார் கேட்டுள்ளார்.

## சில்லாலை மோதலில் அதிகாரி உட்பட 5 பேர் காயம்

(கொழும்பு)

வர் தெரிவித்தார்.

### செஞ்சிலுவை அதிகாரி மரணம்

## பூரண அறிக்கை தயாரிக்க கொழும்பு அலுவலகம் முயற்சி



செய்தியாளர் மாநாட்டில் ...த்து கருத்து தெரிவித்த அவர்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

# இனப்பிரச்சினையை தீர்க்க இந்தியா முயலவேண்டும்

## இந்திய பத்திரிகையாளர் தெரிவிப்பு

ராஜீவ்காந்தி படுகொலையை காரணம் காட்டி இலங்கைத் தமிழரது துயரங்களை கண்டு கொள்ளாது இருப்பது சரியல்ல என பிரபல இந்திய பத்திரிகையாளர் குல்தீப் நயார் தெரிவித்துள்ளார்.

மனிதாபமான அடிப்படையில் இலங்கை பிரச்சினையை தீர்க்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்றும் நயார் கேட்டுள்ளார்.

★ ★

### உண்ணா விரதமும் ஊர்வலமும்

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை ரீகன் நகரிலிருந்து மக்கள், இந்துக் கல்லூரி வரை காலை 6-30 மணியளவில் ஊர்வலமாகச் செல்ல உள்ளதுடன் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் உண்ணாவிரதமும் இருக்கவுள்ளனர். இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படுகிறது.

## சில்லாலை மோதலில் அதிகாரி உட்பட 5பேர் காயம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் சில்லாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒபரேஷன் சூறாவளி நடவடிக்கையில் ஒரு அதிகாரியும் நான்கு படையினரும் காயமடைந்ததாக கொழும்பில் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுமார் 11 மணிநேரம் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் படைகள் இப்போது மீண்டும் தமது பழைய முன்னணி நிலைகளுக்கு திரும்பி விட்டதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கண்ணிவெடியில் பலியான பொதுமக்களுக்கு நஷ்டஈடு

### வீரப்பன் வழங்கினார்

(சென்னை)

அண்மையில்சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனின் கண்ணிவெடியில் சிக்கி இறந்த 22 பேர்களில் பொதுமக்கள் சிலரின் குடும்பங்களுக்கு வீரப்பன் நஷ்டஈடு வழங்கியுள்ளார்.

தமிழக - கர்நாடக எல்லை பாலாறு பகுதில் கடந்தவாரம் வீரப்பனின் கண்ணிவெடியில் தமிழக அதிரடிப்படை பொலிசார் மற்றும் வீரப்பன் குறித்து தகவலறிய பொலிசாரால் நிர்ப்பந்தத்தின் பேரில் கொண்டு செல்லப்பட்ட சில பொதுமக்கள் உட்பட 22பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இதில் கொல்லப்பட்ட பொதுமக்கள் சிலரின் குடும்பங்களுக்கே வீரப்பன் நட்டஈடு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இறந்த மற்றும் காயமடைந்த அதிரடிப்படை பொலிசாரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க முதலமைச்சர் ஜெயலலிதா

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

### செஞ்சிலுவை அதிகாரி மரணம்

## பூரண அறிக்கை தயாரிக்க கொழும்பு அலுவலகம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச்சங்க உபதலைவர் திரு. க. புவனேந்திரன் சிறிலங்காப்படைகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட சம்பவம்குறித்த அனைத்துத் தகவல்களையும் கொண்ட பூரண அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலக செயலாற்றுப்பணிப்பாளர் திரு. தயாளதேவா நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தார். இவர் மேற்படி சம்பவம் குறித்து ஸ்தலத்துக்குச் சென்று சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார். அத்துடன் சம்பவதினம் மரணமடைந்த உப தலைவருடன் கடமையில் இருந்த செஞ்சிலுவைத் தொண்டர்கள் மற்றும் ஏனைய செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து நேரடித் தகவல்கள் பலவற்றைச் சேகரித்துக் கொண்டார்.

மேலும் மேற்படி சம்பவத்தைக் கண்டித்து யாழ். நகரில் நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியையும் பார்வையிட்டார்.

இவ்வாறு பெற்றுக்கொண்ட தகவல்களைக்கொண்டு மேற்படி சம்பவம் தொடர்பாக பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டு இலங்கைசெஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் மேற்படி சம்பவம் குறித்து ஜெனீவாவில் உள்ள செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம் கோரப்படும்

(கொழும்பு)

1991ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் இம்மாத இறுதிக்குள் கோரப்படவுள்ளன. 1992ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் 1994ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

1990ஆம் ஆண்டு பரீட்சையில் பொறியியல்பீட தெரிவு தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத்தொடர்ந்து இம்மாத முடிவுக்குள் அப்பிரிவு மீளமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சம்பளம் வழங்க முடிவு

வடபகுதியில் இருக்கும் உப்பளங்களில் கடமை புரிந்த ஊழியர்களுக்கான 1992 ஆம் ஆண்டுக்கான சம்பளக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன இதற்கான நிதியை திறைசேரி ஒதுக்கீடு செய்துள்ளது. 1992ஆம் ஆண்டின் மாதாந்த சம்பளம் முழுவதும் மொத்தமாக வழங்கப்பட விருப்பதாக உப்புக் கம்பனி நிர்வாகம் அறிவித்துள்ளது.

### சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

பதினையாயிரம் கிராமங்களில் 15 ஆயிரம் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்டம் சம்பந்தமாக ஆராய்வதற்காக சகல உதவி அரசாங்க அதிபர்களையும் வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சமுகம் தருமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (சி)

## தமிழ்நாட்டிற்கு தனிப்படை சட்டமூலம் சமர்ப்பிப்பு

### ஈழப்போராளிகளை முறியடிக்கவாம்

(சென்னை)

தமிழ்நாட்டிற்கென தனிப் பாதுகாப்புப்படை ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதற்கான சட்டமூலம் நேற்று தமிழக சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளை முறியடிக்க தனிப்படை ஒன்று அமைக்கப்படுவது அவசியமாகின்றது என இது தொடர்பாக சபையில் குறிப்பிடப்பட்டது.

இந்தப்படை முதலமைச்சருக்கும் அவரின் நெருங்கிய குடும்பத்தினருக்கும் முன்னாள் முதலமைச்சர்களுக்கும் அவர்களது நெருங்கிய உறவினர்க்கும் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை மேற்கொள்ளும்.

### செஞ்சிலுவை அதிகாரி மரணம்

# ஆயிரக்கணக்கான மக்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவர் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் தாக்குதலில் கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இக் கண்டனப் பேரணியில் பெருமளவு செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், சென் ஜோன் அம்புலன்ஸ் படையினா, சாரணர், மக்கள் நலன் புரி சங்கத்தினர் மற்றும் பல அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் தங்களது சீருடையில் கலந்து கொண்டனர்.

கடந்த பத்தாம் திகதி வலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான அவசர உதவிகளை வழங்குவதற்கென இலங்கை செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் சீருடையுடன் கடமையிலீடுபட்டிருந்த வேளை சிறிலங்கா விமானப் படையினர் திட்டமிட்டு மேற்கொண்ட தாக்குதலின்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் திரு. புவனேந்திரன் பலியானது தெரிந்ததே.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இக் கண்டனப் பேரணி கோவில்வீதி வழியாக சென்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ் தானிகராலய யாழ். வதிவிட பிரதிநிதி திரு. அசோக்குமாரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பின் அங்கிருந்து நாவலர் வீதி. ராசாவின் தோட்டவீதி வழியாக அரசசார்பற்ற நிறுவனங்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## செஞ்சிலுவை அதிகாரியின் கொலை பாரிய குற்றச் செயலாகும்

### சமூகசேவை நிறுவனங்கள் கண்டனம்

சர்வதேச மனிதநேயச் சட்டத்தால் பாதுகாப்பு வழங்கப்படும் ஆளுக்கோ அல்லது இலக்குக்கோ எதிராக தெரிந்தும் புரியப்படும்கொலை சர்வதேச மனித நேய சட்டத்தின் பாரிய மீறல் குற்றமாகவே கருதப்படும். ஜெனீவா பிரகடனத்திலும் அதன் மேலதிக இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்ட பிரிவுகளை முழுமையாக கடைப்பிடிப்பதும் வலுவாக அமுல் செய்வதும் அரசுகளின் பொறுப்பாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட சமூக சேவை நிறுவன ஊழியர் தொண்டர்கள் சம்மேளனம் ஜெனீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை குழுத்தலைவருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் சிறிலங்காஜனாதிபதிபிரேமதாஸ, ஐ.நா ஸ்தானிகராலயவதிவிட பிரதிநிதி, கொழும்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஆகியோர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளையின் உபதலைவர் க. புவனேந்திரன் அவர்களை அடையாளம் கண்டும் கொல்லப்பட்ட சம்பவம் சர்வதேச மனித நேய சட்டத்தை மீறிய செயல் என்பது மிகவும் தெளிவானது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்பு

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## வரி விளம்பரம்

### சேவை

றெனி மூக்குக்கண்ணாடிய கம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, அணைப்பந்தி (யாழ் கனியார் வைத்தியசாலைக்கு அண்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது. ஆக்கம்: ''அநேகா'' ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

### புலமைப் பரிசில் (ஆண்டு 5)

சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 18-04-93 ஞாயிறு வெளியிடப்படும் விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4705)

### அன்பளிப்பு

வட பிராந்திய லயன்ஸ் கழகத்தினர் தமது வருடாந்த மாநாட்டின் ஓர் அங்கமாக பூதவுடல் கொண்டு செல்லும்

## ஐ. தே. க.எம். பிக்கள் வெளிநாடு செல்லத் தடை

[கொழும்பு]

ஆளும் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுசெல்லகட்சித் தலைமையினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல்கள் நெருங்கி வருவதையிட்டே இந்த கட்டுப்பாடு அமுலாக்கப்படுவதாக ஐ. தே. க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு எம். பியும் தமது தொகுதிகளுக்குச் சென்று தேர்தல் பிரசார அலுவல்களைகவனிக்குமாறும் கோரப்பட்டுள்ளனர்.

## யாழ் நகரில் ...

20 வருடங்களுக்கு மேலாக
இணையற்ற சேவையாற்றும்
ஒரே ஒரு கல்வி நிறுவனம்

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

### O/L - 93 பகல் நேர வகுப்பு

(வாரத்தில் 4 நாட்கள்)
காலை 8.00—பி.ப 1.00

- முதற் பிரிவு ஆரம்பித்து ஒரு வாரத்தினுள் அடுத்த புதிய பிரிவு (அதே ஆசிரியர் குழு)
- இதற்கு மேல் புதிய பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

9-ம் தேதிக்கு முன் பெயர்களை பதியுங்கள்

(சி-6435)

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்

ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:
விலைப விபரம்:

## அஞ்சலி



| தோற்றம்: | மறைவு |
|---|---|
| 22 | 13 |
| — | — |
| 02 | 04 |
| — | — |
| 1931 | 1993 |

அமரர்

### வேலுப்பிள்ளை பூவிலிங்கம்

புன்சிரிப்புத் தவழுகின்ற புனித உள்ளம்
பூவிலிங்கப் பெரியோனின் புகழ் இமயம்
இன்னொருவர் இவர்க்கீடு இல்லை உண்மை
எழிலாகப் புத்தகங்கள் கட்ட வல்லோன்
பேரேடு ஆய்வுக் கட்டுரைகள் கட்டும்
பழைய தலைமுறையுன்னோடொழிந்ததையா
அன்புள்ள 'பூவிலிங்க அண்ணா' உங்கள்
ஆத்மா நற்சாந்தியுற வேண்டுகின்றோம்

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6445)

உரிமையாளர், ஊழியர்,
பாரதி பதிப்பகம்.
(A. B.Printers)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
குரும்பசிட்டி மக்களுக்கு

## இலவச பால்மா விநியோகம்


இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி (J/242) குரும்பசிட்டி கிழக்கு (J/243) கிராம சேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 1-3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வகைகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியானவர்கள் எதிர் வரும் 25-ம், 26-ம் திகதிகளில் பிற்பகல் 2-5 மணிவரை மயிலணி ஒழுங்கை சுன்னாகத்தில் உள்ள சபையின் தற்காலிக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

ச. பழனிவேல்
சி. கௌரிபாலன்
இணைச் செயலாளர்

(4704)

## 180-வது நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 15 | 22 |
| — | — |
| 04 | 10 |
| — | — |
| 1975 | 1892 |

### வீரவேங்கை காங்கேயன்

(பாலசிங்கம் விமலன்)

ஒளிவிளக்காய் விமலனாய்
யாழ் மீசாலையில் பிறந்து
வேங்கை காங்கேயனாய் வன்னி மண்ணில்
வீரத்துடன் திகழ்ந்து
சங்கமமாகினீர் கிளிநொச்சி
மாவீரர் துயிலும் இல்லத்தில்

ஆனையிறவு உப்பளப் பகுதியில் உம்முடன் வீரச்சாவைத் தழுவிய 14 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தவகிரி, கேணியடி வீதி
மீசாலை.

அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை.
கொத்தம்பியா குளம்,
துணுக்காய்.

(3904)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-17

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-
★ சின்னத்தம்பி—கிருஷ்ணபிள்ளை
(கதிரவெளி வாகரை - மட்டு.)

1986ஆம் ஆண்டு யாழ் நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்

யாழ்ப்பாணம். (4700)

## புலமைப் பரிசில் (ஆண்டு 5)

சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம் ஆங்கிலம்) 18-04-93 ஞாயிறு வெளியிடப்படும் விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4705)

## அன்பளிப்பு

வட பிராந்திய லயன்ஸ் கழகத்தினர் தமது வருடாந்த மாநாட்டின் ஓர் அங்கமாக நோயாளரை ஏற்றிக் கொண்டு செல்லும் உந்துஇழுவை வண்டி ஒன்றை யாழ் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

நாளை காலை ஒன்பது மணியளவில் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் இது வைபவரீதியாக ஒப்படைக்கப்படவுள்ளது.

## சேமிப்பு சான்றிதழ் வழங்கப்பட்டது

(சுன்னாகம்)

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையினரின் ஆதரவுடன் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு பண்ணிசைப் போட்டியொன்று நடாத்தப்பட்டது

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு இலங்கை வங்கி யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் தே. கணேசமூர்த்தி சேமிப்பு சான்றிதழ்களை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் முன்னாள் முகாமையாளர் எம். பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


பதிவு
செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையார்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

[சி-6438]



பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்

ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)



**ஜெசித்தாரா உணவகம்**

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:

விலை விபரம்:

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி, 6367)



**சேவை**

சகலவிதமான உணவு வகைகளுக்கு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புலப்படும்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6439)


## தற்கொடையாளி...

வல்லாதிக்கம் நிலைகொண்டபோது
தன் மைந்தருக்காய் மனங்கலங்காது
மறவர்படை தலைக்கவென்று
தன்னுயிரை ஈந்த அன்னை பூபதிக்கு
எங்கள் நினைவஞ்சலி...

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(4701)



## திருமதி சகுந்தலாதேவி அழகானந்தசுந்தரம்

வல்வெட்டித்துறை

| மலர்வு : | உதிர்வு : |
|---|---|
| 19 - 10 - 1934 | 18 - 03 - 1993 |

இகமதில் ஈரைந்து மாதம் சுமந்து என்னை
ஈன்றெடுத்த பாசத்திரு விளக்காம் அன்னை
இறைபதம் சேர்ந்து மறந்துவிட்டாள் மண்ணை
இச் சோகம் தாளாது அழுகை மறைக்குது கண்ணை
இதயத்தைப் பிழிகிறது உன் பிரிவுச் சோகம்
உனை இழந்த உள்ளங்களைச் சூழுது கவலை மேகம்
ஈடில்லா இவ்விழப்பின் ரணம்
என்று ஆறும் இறைத்தாயே இகவுலகில் உனக்கீடோ யாகும்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையம் வைத்தும், மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த வீரகேசரிக் குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமதுஉளமார்ந்த நன்றி

17-04 93 அன்று வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்
டாக்டர் க. அழகானந்தசுந்தரம்

பிள்ளைகள் : குகானந்தசுந்தரம், சதானந்தசுந்தரம், யோகானந்தசுந்தரம், ஜெகானந்தசுந்தரம், மாலினி, ஜெயந்தினி, நளாயினி

மருமக்கள்: சேவபாலன், தேவேந்திரன், இந்திராதேவி, பாமினி, சுஜாதா

பேரப்பிள்ளைகள் : கோகுலானந்தசுந்தரம், வைஷாலி, அருளானந்தசுந்தரம், கவிதா.

259. கெரவலப்பிட்டிய.
ஹெந்தளை,
வத்தளை.

(4702)

ஆனையிறவு உப்பளப் பகுதியில் உம்முடன் வீரச்சாவைத் தழுவிய 14 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தவகிரி, கேணியடி வீதி
மீசாலை.

அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை.
கொத்தம்பியா குளம்,
துணுக்காய்.

(3904)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-17

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ சின்னத்தம்பி-கிருஷ்ணபிள்ளை (கதிரவெளி வாகரை - மட்டு.)

1986ஆம் ஆண்டு யாழ் நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ஜெரி (சுப்பிரமணியம் யோகராசா - கிராம்புவில் பெருங்குளம் சந்தி. சாவகச்சேரி - யாழ்.)

1988ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த-

குருவி [தம்பிராசா இராஜேஸ்வரன் - அம்பிலாந்துறை - மட்டு.]

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினரால் கைது செய்யப்படும் பொழுது தப்பிச் செல்கையில் சுட்டுக் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த-

கப்டன் டேவிட் [கந்தசாமித்துரை சிவகுமார் - 96கடற்கரை வீதி பருத்தித்துறை - யாழ்.]

யாழ் - கல்வியங்காட்டில் இந்தியப்படையினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கெனடி (சிவநாதன் வாமதேவன் - 13/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை - யாழ்.)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ செல்லத்துரை சத்தியநாதன் [காரைதீவு கல்முனை - அம்பாறை]

திருமலை கட்டைபறிச்சான் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

★ ஜெகன் (கிருஷ்ணபிள்ளை ஜெயராசா - கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த

ரஞ்சித் [பொன்னுச்சாமி சிவனேஸ்வரன் - குமரக்கோட்டம், கோண்டாவில் - யாழ்.]

1991ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

நாயகன் (முருகையா வசந்தகுமார் - வவுனியா)

ஜீவா [நாகன் சிவலோகநாதன் - மிருசுவில் வடக்கு, கொடிகாமம் - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6441]

சிந்தனைக்கு

கேவலமாய் இலாபம் அடைவதை விட கண்ணியமாய் நட்டம் அடைவதையே விரும்புவேன்.

- புப்லியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-04-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## நோயாளருடன் விளையாடாதீர்

கண்ணில் நோயினால் பீடிக்கப்பட்டு மருந்து பெறச் சென்றவருக்கு காதுக்குள் விடும் மருந்து கொடுக்கப்பட்டது.

மனநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மதுசாரம் வழங்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகள் சிலவற்றில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல் பார்மஸிகளில் ஒரு மருந்து வகைக்காக வேறு மருந்து வகை புரியாமல் வழங்கப்படுவதும், தரமான மருந்து வகைக்குப் பதில் தரம் குறைந்த, கலப்படமான மருந்துகள் வழங்குவதும் ஒரு சாதாரண விடயமாக இடம்பெறும் அம்சமாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

இவ்வாறாக தனியார் மருத்துவமனைகளிலும், பார்மஸிகளிலும் இடம்பெறும் தவறுகள் நோயினால் அவஸ்தைப்படுபவர்களை மேலும் மேலும் துன்பத்திற்கும், ஆபத்திற்கும் உள்ளாக்குபவையாகும். இது குறித்து அண்மையில் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் செ. சிவஞானசுந்தரமும் கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டிருந்தார். 'தற்காலத்தில் சுமார் மூன்று கிழமைகளில் பயிற்சி பெற்ற பதினெட்டு வயது இளம் பெண்கள் பார்மஸிகளில் நின்று வியாதிக்கு மருந்து கொடுக்கின்றார்கள். இதனால் எமது சுக வாழ்வு பாதிக்கப்படுகின்றது'' எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் டாக்டர் சிவஞானசுந்தரம் குறிப்பிட்டதை விடவும் யாழ். நகரின் நிலை மோசமானதாகும். பல பார்மஸிகளில் மூன்றுவாரம் கூட பயிற்சி பெறாத ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். இந்நிலை தனியாக பார்மஸிகளில் மட்டுமல்ல. யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபலமான தனியார் வைத்தியசாலைகளிலும் காணப்படுவது வேதனைக்குரியது.

அண்மையில் எமக்கு கடிதம் ஒன்று எழுதிய பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரி ஒருவர் (ஓய்வு பெற்றவர்) பிரபல தனியார் வைத்தியசாலைஒன்றில் ''பதிவுசெய்யப்பட்ட ஒருபார்மஸிற்' கூட இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவ்வைத்தியசாலையில் இவர் மருந்துக் கலவையாளர்களாக இருக்கின்றபோதும் எவரிடமும் தகுதியான சான்றிதழ் கிடையாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அவல நிலையானது உருவாவதற்குக் காரணம் பார்மஸிற்றுக்கள் இல்லாமலேயோ

# அந்நியனின் அதர்மத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த அன்னை

விடுதலைப் புலிகளின் விருப்பத்துக்கு மாறாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிறது.

இந்திய வல்லாதிக்கப்படைகள் தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன தமிழீழ மக்களும் உண்மையின் சூத்திரத்தை உணர்ந்துகொள்ளாது இந்திய ஆக்கிரமிப்புப் படையை கை அசைத்து வரவேற்றனர்.

தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் வந்துவிட்டார்கள்என எண்ணி மகிழ்ந்தனர்.

''சிங்களப்படை இனிமேல் எம்மை எதுவும் செய்து விட முடியாது''

சிறிலங்கா அதிரடிப் படையினரின் கொலைக்களத்தில் சிக்கித் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களின்எதிர்பார்ப்பு.

அன்னை பூபதியும் அப்படித்தான் நம்பினாள். தனது இரண்டு பிள்ளைகளைச் சிங்களப்படையின் இரத்த வேட்டைக்கு இரையாக்கியதை நினைத்து ''இனிமேல் இந்த அதிரடிப்படை வெளிக்கிடட்டும் பாப்பம்'' அன்னையின் ஆவேசம்கலந்தவார்த்தைகள். 1987 அக்டோபர் 10-ம்நாள் இந்திய இராணுவத்தின் வல்லாதிக்க அடக்குமுறைதமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டநாள். ஈழத்தமிழினத்தின் விடிவுக்கென வெளுத்த வானம் மீண்டும் கரு மேகங்களால் சூழ்ந்துகொண்டநாள்.

### இந்திய யுத்தம் வெடித்து தென்தமிழீழம் வரை பரவுகிறது.

தென் தமிழீழத்தின் தெருவோரம் எங்கும் தமிழனின் பிணங்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்த நாட்கள். சிங்கள சிறிலங்கா இராணுவம் புரிந்து வந்த மனிதப்படுகொலைகளுக்கு மகுடம் சூட்டுவது போல் இந்தியப்படுகொலைகளாலும், பாலியல் வன்முறைகளும், மட்டுநகர வீதிகளில் மலிந்த நாட்கள், இவ்வேளையில் தான் ''அன்னை பூபதி'' ஆவேசத்தோடு அன்னையர் முன்னணியினரை அணிவகுத்து அகிம்சைப் போரை ஆரம்பித்தாள்.

### இந்திய இராணுவத்தின் கிராமியப் படுகொலைகள்

22-10 87 அன்று, காலை

கொலை வெறிக் கூர்க்காப் படையினர் ஓலைக்குடிசைகளைத் தீ வைத்துக் கொளுத்தினர் உயிரைக்காப்பாற்ற ஓடித்தப்ப எண்ணிய எம் உடன் பிறப்புக்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். மானமே பெரிதென்று வாழ்ந்த கிராமத்துப் பெண்கள் துடிக்க, துடிக்க ஆடு, மாடுகள் போல் அறுத்தெறியப்பட்டனர்,

அவர்கள் அன்று எழுப்பிய அவல ஓலங்கள் இன்னும் ஓயாது தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன இந்தியப்படையினர் இக் கிராமத்தைத் துவம்சம் செய்து விட்டு அயல் கிராமத்திற்கும் தொடர்ந்தனர்.

## இந்திய இராணுவத்தினரின் கிராமியப் படுகொலைகள்

தன்னா முனையிலே கிறிஸ்தவப் பாதிரியினரால் நடாத்தப்படும் வயது வந்த பெண் பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையத்துக்குள் இந்தியப் படை புகுந்தது. பாதிரிமார் என்பதால்உடைகளைப் பார்த்ததும் தங்களை இந்திய அமைதிப்படை எதுவும் செய்ய மாட்டாது எனும் நம்பிக்கையில் பிள்ளைகளை அறைக்குள் நிறுத்திவிட்டு பாதிரிமார்வாசலில் காவல் நின்றனர். காம வெறிபிடித்த இந்திய சிப்பாய்களுக்கு துறவிகளை மதிக்கும் பக்குவம் இருக்கவில்லை.

பாதிரிமாரை இழுத்துத் தள்ளிவிட்டு உள்ளே புகுந்த கொலைப்படையினர் அனாதரவாகி அபயம் தேடி நின்ற இளம் பெண்களை ஓடித் தப்ப முடியாத அறைக்குள் பூட்டி வைத்து மிருகத்தனமான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

அந்தப் பராமரிப்பு நிலையத்திலிருந்த பெண்கள் சிலர் தங்களது குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு கடற்கரை வழியாக மட்டக்களப்பை நோக்கி ஓட்டமெடுத்தனர். கருவேப்பங்கேணி, இருதயபுரம், முகத்துவாரம் ஆகிய கிராமங்களில் அகதிகளாக ஓடிச்சென்று தங்களுக்கு ஏற்பட்ட அவலத்தை எடுத்துக் கூறினர். மக்கள் ஒன்றுசேர்ந்தனர் உதவிகள் புரிந்தனர்.

### களுவாஞ்சிக்குடியில் மற்றுமோர் ரணகளம்

சத்துருக்கொண்டான் படுகொலைக்களத்தின் இரத்த வாடை மறையுமுன்னர் மற்றுமோர் படுகொலைக்களம் களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்றது.

23-11-1987 களுவாஞ்சிக்குடி பிள்ளையார் ஆலயத்துக்கு முன் இந்தியப்படையினர் குவிக்கப்பட்டனர். பாடசாலைக்குள் பாடம் படிப்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள் இழுத்து வரப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஓர் ஆசிரியையை தலை முடியில் பிடித்து இழுக்கின்றான் ஓர் இந்தியச் சிப்பாய் முடி கையோடு வந்துவிடுகிறது. ஆ...பொய் முடி... நீ.. புலி எனக் கத்துகிறான் இந்தியன் அவ்விடத்திலேயே அந்த ஆசிரியை சுட்டுக்கொல்லப்படுகின்றாள்.

பாவம் அந்த அப்பாவி ஆசிரியை தன் படிப்பைத் தொடருவதற்கு வீட்டிலே வசதி இல்லாத நிலையில் நெல் குற்றும் ஆலையில் அவள் வேலை செய்து வந்தாள் அப்பொழுது இயந்திரத்தினுள் தலைமயிர் புகுந்ததால் அவளது முடிகள் பிடுங்கப்பட்டன. முடியில்லாத நிலையில் பொய்முடி

**சி. கரிகாலன்**
துணைப்பொறுப்பாளர்
அரசியல்துறை

தரித்து ஆசிரியையாகதொழில் புரிந்த அந்தப் பெண்ணின் சோக வரலாறு காமவெறி கொண்ட இந்தியனுக்கு எங்கே தெரியப்போகிறது?

வாசிகசாலைக்குள் இருந்த இளைஞர்கள் இருவர் இந்தியப்படையினரால் இழுத்து வரப்படுகின்றனர். பிள்ளை

நெரித்து கொல்லப்படுகின்றான். இரத்தம் பீறிட்டு மதில் சுவர்இடிந்து சிவப்பாகின்றது.

இந்தியப்படையினர் வீடு வீடாகப் புகுந்து காமவேட்டை யாடினர். வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. உடைமைகள் சூறையாடப்பட்டன. கடைகள் களவாடப்பட்டுக் கொளுத்தப்பட்டன. காம வேட்டையில் தன் மனைவி இழுத்துச்செல்வதைத் தடுத்து நிறுத்தி இந்தியனுடன் சமர் புரிந்த கணவன் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்படுகின்றான். இந்தியப் படையின் கொடுமைகள் தென்தமிழீழம் முழுவதும் கோர தாண்டவம் புரியத் தொடங்கியது.

பெண்கள் வீதிகளுக்குச் செல்ல முடியாது இந்திய வெறிப் படைக்கஞ்சி வீடுகளில் அடங்கிக் கிடந்தனர்.

மட்டக்களப்பு நகர் பகுதிக்குள்ளே வெள்ளைப் பாலத்தால் வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்கள் ஒரு கடைக்குள் இழுத்து வரப்பட்டுபட்டப்பகலிலே பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். இச் செய்தி நகரையே உலுக்கியது. மட்டக்களப்பு தாய்மார் பதைபதைத்தனர்.

இனியும் பொறுத்திருக்க முடியாது, இழப்புக்களைத் தாங்க முடியாது, அன்னையர்கள் அணிதிரண்டனர். இந்தியப்படைபெண்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கண்டு அன்னையர் முன்னணியாக அணிவகுத்தனர்.

''இந்தியப்படை உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்''.

''விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்''.

எனும் கோரிக்கையை முன்வைத்து திலீபன் காட்டிய அகிம்சைப்போரில் மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் குருந்தமர நிழலில் அடையாள உண்ணா நோன்பு அனுட்டித்தனர்.

உண்ணா விரதப் போருக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்புமாவட்டத்தின்அன்னையர் தெருவெங்கும் திரண்டு நிற்பதைக்கண்டு மிரண்டது இந்தியப்படை. எப்படியாவது அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்து விட ஆலோசனைநடாத்தியது அமைதிப்படை.

### சந்தைக்குள் நடைபெற்ற படுகொலை

இவ்வேளையில் தான் மட்டக்களப்பு நகருக்குள் சிங்கள சிறிலங்காப் பொலிசாரின் வெறிகொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் இடம் பெற்றது.

மட்டக்களப்பு நகரச்சந்தை சனக்கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. மக்கள் தங்கள் அன்றாட தேவைக்கான பொருள்களை அச்சம் கலந்த மனோநிலையில் அவசர அவசரமாக வாங்கிக்கொண்டிருந்தார்கள். தமிழ், முஸ்லிம் வியாபாரிகள் சுறு சுறுப்பாக வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவ்வேளை சிங்கள காவல் படையினர் சந்தையை திடீரெனச் சுற்றி வளைத்தனர்.

எதுவுமே அறியாத அப்பாவிப் பொதுமக்கள், ஆண்கள், பெண்கள். தமிழர்கள், முஸ்லிம்கள், சிறுவர்கள், குழந்தைகள், மாணவர்கள் என பேதமின்றி தாக்கப்படுகின்றார்கள். சிங்களப் பொலிசாரின் கண்மூடித்தனமான தாக்குதலில் மக்களின் மண்டைகள் பிளந்தன, கைகால்கள் முறிந்தன, எலும்புகள் நொருங்கின. பொலிசாரின் துப்பாக்கிகள் ரவைகளை கக்கின, வீதிகளில் பிணங்கள் குவிந்தன, வியாபாரிகள் பலர் கடைகளுக்குள் பொருள்களோடு சேர்த்துக் கொளுத்தப்பட்டனர்.

நெடுநாள் இரத்தப்பசி இடந்த சிங்களக் காடையர் கூட்டம் தமிழ், முஸ்லிம் மக்களைக் கொன்று குவிப்பதை இந்திய அரக்கர்படை கண்டு களித்துக் கொண்டிருந்தது. தமிழ் மக்களின் படுகொலைகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் சொத்தழிவுகளுக்கும் இந்திய - சிங்கள ஆயுதப்படைகள் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுவதைக் கண்டு அன்னையர் முன்னணியினர் ஆவேசம் கொண்டனர்.

''இனிமேல் எமக்கு எந்த அரசுகளும் பாதுகாப்பு வழங்கப் போவதில்லை'' இழப்புக்

வாழ்வு பாதிக்கப்படுகின்றது'' எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் டாக்டர் சிவஞானசுந்தரம் குறிப்பிட்டதை விடவும் யாழ். நகரின் நிலை மோசமானதாகும். பல பார்மஸிகளில் மூன்றுவாரம் கூட பயிற்சி பெறாத ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். இந்நிலை தனியாக பார்மஸிகளில் மட்டுமல்ல. யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபலமான தனியார் வைத்தியசாலைகளிலும் காணப்படுவது வேதனைக்குரியது.

அண்மையில் எமக்கு கடிதம் ஒன்று எழுதிய பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரி ஒருவர் (ஓய்வு பெற்றவர்) பிரபல தனியார் வைத்தியசாலைஒன்றில் ''பதிவுசெய்யப்பட்ட ஒருபார்மஸிற்' கூட இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவ்வைத்தியசாலையில் இவர் மருந்துக் கலவையாளர்களாக இருக்கின்றபோதும் எவரிடமும் தகுதியான சான்றிதழ் கிடையாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அவல நிலையானது உருவாவதற்குக் காரணம் பார்மஸிற்றுக்கள் இல்லாமலேயோ, அன்றி தகுதியான மருந்துக் கலவையாளர்கள் இல்லாமல் இருப்பது காரணமல்ல ஒருவேளை இவர்கள் பற்றாக்குறையாக இருப்பினும் வைத்தியசாலை சொந்தக்காரர்களும், பார்மஸி உரிமையாளர்களும் நல்ல சம்பளம் கொடுத்து பார்மஸிற்றுக்களை நியமனம் செய்யாமையும், புதிய பார்மஸிற்றுகளுக்கு பயிற்சி அளிக்க முற்படாமையுமே காரணமாகும்.

இன்று யாழ்.குடாநாட்டில் மருந்துப் பொருள்களை பலசரக்குக் கடைகளிலும், தேநீர் கடைகளிலும் வாங்கக் கூடிய ஒரு நிலை உருவாகியுள்ளது. இன்றைய போர் சூழ்நிலை இவ்வாறானதொரு நிலையை உருவாக்கி இருப்பினும் இது ஓர் ஆபத்துவிளைவிக்கும் 'விளையாட்டு' என்றே கூற வேண்டும். மருந்துப் பொருள்களுடனோ, அன்றி, வைத்தியத்துறையுடனோ எதுவித சம்பந்தமும் இல்லாதவர்கள் லாப நோக்கத்திற்காக மேற்கொள்ளும் இவ்வியாபாரம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் அவசியமானதாகும்.

மேலும், யாழ்ப்பாணத்தில் இன்று தனியார் மருத்துவமனைகளும் கீரைக்கடைக்கு எதிர்கடை என்ற நிலையில் உருவாகிவருகின்றன. அண்மையில் யாழ். நகரில் இரு மருத்துவமனைகளுக்கிடையில் உருவான போட்டியானது வீதியில் இழுபறி நிலை உருவாகும் நிலைவரைக்கும் வந்தது. இம் மருத்துவமனைகளில், ஆலோசனை வழங்கும் டாக்டர்களைத் தவிர மீதமுள்ள அனேகர், மருத்துவமனைகளில் தாம் புரியும் கடமைகளுக்குப் பொருத்தமான தகுதி பெற்றவர்களாக இல்லை. வெள்ளை அங்கி அணிபவர்கள் எல்லாம் மருத்துவதாதிகள் ஆகிவிடமுடியாது.

இவ்வாறாக இன்று முழுமையாக வர்த்தகமயமாகிவிட்ட இவ் வைத்திய சேவையை பொறுப்புள்ள அதிகாரிகள் தீவிர கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட பார்மஸிகள், மருத்துவமனைகள் என்பனவற்றில் மட்டுமே மருந்துப் பொருள்கள் விற்பனை செய்வதை உறுதிப்படுத்த வேண்டும். அத்தோடு, ஒவ்வொரு பார்மஸிகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும், பார்மஸிற்றுக்கள், மருந்துக்கலவையாளர்கள் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். இவற்றை கவனத்திற் கொள்ளாத இடத்து இதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு தனியாக லாபநோக்கம் கொண்ட வர்த்தகர்களையும், தனியார் மருத்துவமனை சொந்தக்காரர்களையும் மட்டும் குறைகூறிப்பயனில்லை. அதிகாரிகளும், இவற்றிற்கான தார்மீக பொறுப்பை ஏற்கவேண்டும்.

---

தென்தமிழீழம் வரை பரவுகிறது.

தென் தமிழீழத்தின் தெருவோரம் எங்கும் தமிழனின் பிணங்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்த நாட்கள். சிங்கள சிறிலங்கா இராணுவம் புரிந்து வந்த மனிதப்படுகொலைகளுக்கு மகுடம் சூட்டுவது போல் இந்தியப்படுகொலைகளாலும், பாலியல் வன்முறைகளும், மட்டுநகர வீதிகளில் மலிந்த நாட்கள், இவ்வேளையில் தான் ''அன்னை பூபதி'' ஆவேசத்தோடு அன்னையர் முன்னணியினரை அணிவகுத்து அகிம்சைப் போரை ஆரம்பித்தாள்.

### இந்திய இராணுவத்தின் கிராமியப் படுகொலைகள்

22-10 87 அன்று, காலை 10 மணியிருக்கும்.

இந்திய கொலை வெறிப்படையின் கனரக வாகனங்கள் கதறிக்கொண்டு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்துக்குள் நுழைகின்றது. ஆயிரக்கணக்கான இந்தியப்படையினரால் சத்துருக்கொண்டான் கிராமம் சுற்றி வளைக்கப்படுகிறது.

ஓலைக்குடிசைக்குள்ளே சொந்தத் தொழில் செய்து சீவனம் செய்யும் அப்பாவிப் பொதுமக்கள் எதுவுமே தெரியாது திகைத்து நின்றனர்.

கும் பக்குவம் இருக்கவில்லை.

பாதிரிமாரை இழுத்துத் தள்ளிவிட்டு உள்ளே புகுந்த கொலைப்படையினர் அனாதரவாகி அபயம் தேடி நின்ற இளம் பெண்களை ஓடித் தப்ப முடியாத அறைக்குள் பூட்டி வைத்து மிருகத்தனமான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

அந்தப் பராமரிப்பு நிலையத்திலிருந்த பெண்கள் சிலர் தங்களது குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு கடற்கரை வழியாக மட்டக்களப்பை நோக்கி ஓட்டமெடுத்தனர். கருவேப்பங்கேணி, இருதயபுரம், முகத்துவாரம் ஆகிய கிராமங்களில் அகதிகளாக ஓடிச்சென்று தங்களுக்கு ஏற்பட்ட அவலத்தை எடுத்துக் கூறினர். மக்கள் ஒன்றுசேர்ந்தனர் உதவிகள் புரிந்தனர், ஆறுதல் கூறினர், அன்னையர்கள் உள்ளம் குமுறினர், இந்தியப்படையின் அமைதிப் போர்வையில் நம்பிக்கை இழந்தனர்.

இதே சமயம் ஆயிரக்கணக்கில் இந்தியப்படையினர் மட்டக்களப்புநகருக்குள் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். மூலைக்கு மூலை முகாம்கள் போடப்பட்டன வீதி வீதியாக கொலைவெறி கொண்டு அலைந்தனர் கூர்க்காப்படையினர்.

றும் ஆலையில் அவள் வேலை செய்து வந்தாள் அப்பொழுது இயந்திரத்தினுள் தலைமயிர் புகுந்ததால் அவளது முடிகள் பிடுங்கப்பட்டன. முடியில்லாத நிலையில் பொய்முடி

## சி. கரிகாலன்

### துணைப்பொறுப்பாளர்
### அரசியல்துறை

தரித்து ஆசிரியையாகதொழில் புரிந்த அந்தப் பெண்ணின் சோக வரலாறு காமவெறி கொண்ட இந்தியனுக்கு எங்கே தெரியப்போகிறது ?

வாசிகசாலைக்குள் இருந்த இளைஞர்கள் இருவர் இந்தியப்படையினரால் இழுத்து வரப்படுகின்றனர். பிள்ளையார் ஆலய மதிலிலே சுவரோடு சேர்த்து நிறுத்தப்படுகின்றனர். இராட்சத கவச வாகனம் அவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கிறது.

இழுத்து வரப்பட்டதை அறிந்த ஓர் இளைஞனின் தாய் மூச்சு வாங்க ஓடிவந்து இந்தியனிடம் இரந்து ஓலமிடுகின்றாள். கவச வாகனத்தின் இரைச்சல் அவள் இட்ட ஓலத்தை அமுக்கிவிட்டது.

அவளின் கண்ணெதிரிலேயே அவளது பிள்ளை மதிலோடு

இனியும் பொறுத்திருக்க முடியாது, இழப்புக்களைத் தாங்க முடியாது, அன்னையர்கள் அணிதிரண்டனர். இந்தியப்படைபெண்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கண்டு அன்னையர் முன்னணியாக அணி வகுத்தனர்.

''இந்தியப்படை உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்''.

''விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்''.

எனும் கோரிக்கையை முன் வைத்து திலீபன் காட்டிய அகிம்சைப்போரில் மாமாங்கப் பிள்ளையார் ஆலய மூன்றலில் குருந்தமர நிழலில் அடையாள உண்ணா நோன்பு அனுட்டித்தனர்.

உண்ணா விரதப் போருக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்புமாவட்டத்தின்அன்னையர்கள், பாடசாலை மாணவிகள் அணி அணியாகத் திரண்டனர். மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளமாய் கரை புரண்டது.

இந்தியப் படைக்கெதிராக மீண்டுமோர் உண்ணா விரதப் போர். காந்தி தேசத்தின் முகமூடியை கிழிக்க அன்னையர் முன்னணியினர் அலையாய் எழுந்தனர்.

பாரதப் படைகளுக்கு எதிராக மீண்டுமோர் உண்ணா விரதப்போர். பெண்கள் பேரலையாய் தென்தமிழீழத்தின்

பொலிசாரின் துப்பாக்கிகள் ரவைகளை கக்கின. வீதிகளில் பிணங்கள் குவிந்தன, வியாபாரிகள் பலர் கடைகளுக்குள் பொருள்களோடு சேர்த்துக் கொளுத்தப்பட்டனர்.

நெடுநாள் இரத்தப்பசி இடந்த சிங்களக் காடையர் கூட்டம் தமிழ், முஸ்லிம் மக்களைக் கொன்று குவிப்பதை இந்திய அரக்கர்படை கண்டு களித்துக் கொண்டிருந்தது. தமிழ் மக்களின் படுகொலைகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் சொத்தழிவுகளுக்கும் இந்திய - சிங்கள ஆயுதப்படைகள் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுவதைக் கண்டு அன்னையர் முன்னணியினர் ஆவேசம் கொண்டனர்.

''இனிமேல் எமக்கு எந்த அரசுகளும் பாதுகாப்பு வழங்கப் போவதில்லை'' இழப்புக்களால் இறுகிப்போன இதயங்களில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் இவைகள்.

சுயமரியாதையோடு தமிழினம் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் ஆட்சியாளர்களின் அதர்மத்தை அடக்கியே ஆக வேண்டும் என அன்னையர் முன்னணியினர் முடிவெடுத்தனர். அனுட்டிக்கப்பட்டுவந்த அடையாள உண்ணாவிரதம் சுழற்சி முறைத் தொடர் உண்ணா விரதமாக மாற்றப்பட்டது.

(தொடரும்)

---

மாகாணசபை தேர்தல்

## சுதந்திரமாக நடைபெறும் சாத்தியம் குறைகின்றது - லலித்

[கொழும்பு]

மாகாணசபை தேர்தல் சுதந்திரமாக நடைபெறும் நிலை தற்போது குறைந்து கொண்டு செல்வதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி அண்மையில் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் குருணாகலையில் நகரசபை எல்லைக்குள் தமது கட்சியின் தேர்தல் கூட்டத்திற்கு நகரசபையினர் அனுமதி மறுத்துள்ளதாகவும், நகரசபைக்குசொந்தமாக எட்டு மைதானங்கள் இருப்பதாகவும் அவைஒன்றையும் கூட்டம் நடத்த தரமுடியாது எனகூறியதாகவும் தெரிவித்தார்.

இதனால் தமது கட்சியினர் நகர சபைக்கு வெளியேயுள்ள தனியார் நிலத்தில் கூட்டம் நடத்தியதாக தெரிவித்தார். இதேவேளை தமது தேர்தல் வேட்பாளர் ஒருவர் கடத்தப்பட்டதுடன் எட்டு உறுப்பினர் பல்வேறுஅச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும், தேர்தலுக்கு நாட்கள் நெருங்க நெருங்க இன்னும் பல ஒழுங்கீனங்கள் நடைபெற ஏதுவான ஒரு சூழ்நிலையே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பல எதிர்ப்புக்களை தாம் எதிர்கொள்ள இருப்பதாகவும் வாக்காளரும் பல அச்சுறுத்தல் மத்தியில் தான் வாக்களிக்க வேண்டும் என்றார்.

மாகாணசபைகள் கலைக்கப்பட்ட பின்பும்

## உறுப்பினர்கள் இன்னும் ஆயுதங்களுடன் வலம்

[கொழும்பு]

மாகாணசபைகள் கலைக்கப்பட்ட போதும் பல மாகாண சபை உறுப்பினர் இன்னும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள், பாதுகாப்புகள் காரியாலயங்களை பாவித்து வருகின்றனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தேர்தல் அமைப்பு விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்றும், நாட்டின் சுதந்திர தேர்தலுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது என்றும் அரசியல்கட்சி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. இது தொடர்பாக மனு ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் சம்பந்தப்பட்டவர்கள் சமர்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

மட்டக்களப்பில்

## பஸ் விபத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் நடைபெற்ற பஸ் விபத்தில் ஐவர் கொல்லப்பட்டனர். வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த தனியார் பஸ்வண்டிஒன்று தன்னாமுனையில் வளைவு ஒன்றில் குடைசாய்ந்தது.

இதில் 5பயணிகள் பலியாகினர் 25பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரப்பனை பிடிக்க புதிய உத்திகள் வகுப்பாம்

(பங்களூர்)

சந்தனக் கட்டை கடத்தல் காரன் வீரப்பனின் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வரும்பொருட்டு பங்களூரில் நேற்று முன் தினம் தமிழக கர்நாடக பொலிஸ் உயர் அதிகாரிகளின் கூட்டு மாநாடு நடைபெற்றது. இந்த உயரதிகாரிகளின் மாநாட்டில் வீரப்பனின் நடவடிக்கையை ஒழிக்க வழிமுறைகளும் வகுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டில் இரு மாநிலங்களின் பொலிஸ் அதிகாரிகளும் வனத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். வீரப்பனுக்கு எதிராக எடுக்க வேண்டிய உத்திகள் அதிகாரிகளால் வரையறை செய்யப்பட்டன. இக் கூட்டு நடவடிக்கைக்கு தேவையான படைபலம் மற்றும் நிதி உதவியை இரு மாநில அரசுகளும் வழங்கும் பட்சத்தில் நடவடிக்கையை இரட்டிப்பு வேகத்தில் மேற்கொள்ள முடியும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மஸிடோனியா ஐ.நாவில் புதிய நாடாக இணைவு

(வாஷிங்டன்)

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசான மஸிடோனியா ஐ.நாவின் 181 ஆவது அங்கத்துவ நாடாக அனுமதிக்கப்பட்டது. கொடி ஏற்றப்படாது தற்காலிக பெயர் ஒன்றுடன் வாக்கெடுப்பின்றியே அதை பொதுச்சபை அனுமதித்த போது பார்வையாளர் பகுதியிலிருந்து மஸிடோனியா என்ற கோஷமும் கரகோஷமும் எழுந்தன

மஸிடோனியா மக்கள் தமது நாடு ஐ.நாவில் அனுமதிக்கப்பட்டதை வெடி கொளுத்தி கொண்டாடினர் தற்காலிக பெயரிலும் கொடி ஏற்றப்படாமலும் ஐ. நாவில் அனுமதிக்கப்பட்டது குறித்து சில மஸிடோனியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# ஸ்ரீதர் திரையரங்கில்

# 100 RIFLES

## (100 துப்பாக்கிகள்)

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

(சி-6376)



# கண்ணீர் அஞ்சலி

## திரு. கார்த்திகேசு அமிர்தலிங்கம்

[உரும்பராய்]

நீர்ப்பாசனத் திணைக்கள முத்துஐயன் கட்டுப்பிரிவில் பிரிவு உதவியாளராகப் பணிபுரியும் திரு. அ. ஜெயராசசிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையான உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு அமிர்தலிங்கம் அவர்கள் 15- 04- 1993 இல் மறைந்தமைக்காக எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கேற்கிறோம்.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்

1993- 04- 17 முத்துஐயன்கட்டுப்பிரிவு


[4707]



31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



நேற்று முன்தினம் "புக்காரா" விமானத் தாக்குதலில் சேதமடைந்த பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி கட்டடங்களின் ஒருபகுதி.

### பூரண

மேளனத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து எடுக்கப்படவிருக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மேற்படி அறிக்கை பயனுள்ளதாக அமையும் என்று கருதப்படுகிறது. (க), (சி)

### கப்பல்

மெற்றிக்தொன் பொருள்கள் இறக்கப்படுவதாகவும், அதே வேளை குமண கப்பலிலிருந்து 248 மெற்றிக் தொன்னுக்கும் 370 மெற்றிக் தொன்னுக்கும் இடைப்பட்ட அளவு பொருள்களே இறக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் குமண கப்பல் பொருள்களுடனேயே திருக்கோணமலை திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மேலும் திருக்கோணமலையிலிருந்து ஏற்றி வரக்கூடிய பொருள்களைக் கொண்டுவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


### கிளை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவு படுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

தனது சேவையை கந்தர்மடம், அரசடிவீதி அங்கர் பார்மஸியில் விற்பனைப் பிரிவை


## தமிழீழ கல்வி பொதுத்தேர்வு இன்று ஆய்வுக் கருத்தரங்கு

கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு குறித்து தமிழீழ கல்விக் கழகம் நடாத்தும் ஆய்வு திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகிறது.

இன்று முற்பகல் 9-30 மணிக்கு யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்களுக்கான சந்திப்பு தமிழீழக் கல்விக் கழக அலுவலகத்திலும்,

நாளை முற்பகல் 9-30 மணிக்கு மருதனாமடம், பண்டத்தரிப்பு கோட்டங்களுக்கான சந்திப்பு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

## இலங்கை-இந்திய உறவு நெருக்கமடைகிறது

### பி. பி. ஸி. தெரிவிப்பு

கடந்த 6 மாதங்களினுள் மூன்றாம் முறையாக ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியாவிற்கு விஜயம் செய்தமை இலங்கை - இந்திய உறவில் நெருக்கம் ஏற்பட்டுள்ளதையே காட்டுவதாக பி.பி ஸி தெரிவித்துள்ளது. இதை கொழும்பிலுள்ள மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீர்வுகள் எதையும் இலங்கை மீது திணிக்க இந்தியா விரும்பவில்லை இதற்கு கடந்தகாலங்களில் உலக அரங்கில் இந்தியா கற்றுக்கொண்ட பாடமே காரணம் என்றும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளுக்குப்பின் தற்போது இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா விளங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆயிரக்கணக்கான

களின் இணையத் தலைவர் திரு கணேசலிங்கத்திடம் மகஜர் ஒன்றை கையளித்தது.

தொடர்ந்து றக்கா வீதியூடாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தைவந்தடைந்தது அங்குவைத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். வதிவிட பிரதிநிதியிடம் மகஜரைக் கையளித்தபின் தொடர்ந்து சென்று இறுதியாக யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

அங்குவைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

மகஜர்களைப் பெற்றுக் கொண்ட அனைவரும் அவ

### தவறாது

### சமுகம் தரவும்

இன்று மு ப 10-00மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் மேதினம் தொடர்பான கலந்


பற்றீஷன்

## தொழிற் பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

## 1. Computer Processing Courses

1. Computer Programming in BASIC Language and MS - DOS Duration : 4 Months Commencing . 27 - 04 - 1993
2. Word Processing and MS - DOS(Word star 4000) Duration; 3Months Commencing: 27-04-1993

WEEK DAY CLASSES (Theory & Practicals)

3. dBASE III PLUS and MS - DOS Duration ; 4 Months
4. LOTUS 1-2-3 (Spread Sheet Analysis) and MS - DOS Duration : 3 Months

WEEK END CLASSES: (Theory and Practicals

★ Equipment Used; LASER XT/2, XT/3.386 and Bitcom Computers IBM Compalibies)

★ Qualification G. C. E. (O/L)

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 26 04 93 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

## 2. Civil Draughtsmanship and Quantity Surveying

Course Covers

i) Draughtsman ship
ii) Engineering Drawing
iii) Building Construction
iv) Civil Engineering Materials
v) Building Quantity

## 3. City and Guilds of London Examination Year 93/94

i) Quantity Surveying
ii) Electricals electronic Engineering Technician

Part I & II

Subjects i) Engineering Science & Circuits
ii) Power
iii) Electronic

★★ Qualification : G. C. E. (O/L)

Part III

Subjects i) Advance Electrical Technology
ii) Generation Transmission & Distribution of Electrical Energy


ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★★ Qualification: Part II சித்தி எய்தியோர்மட்டும்.

## 4. Special English Classes

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல

## அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **தம்பையா தம்பிநாதன்**

[சின்னமணி]

அன்னை மடியில்: 15 - 03 - 1933

ஆண்டவன் அடியில்: 19 - 03 - 1993

பார்க்கும் பொருளிலெல்லாம் - உந்தன்
பாசமுகம் தோன்றுதப்பா
பாரினிலே வேறெதையும் எம் விழிகள்
பார்க்க மறுக்குதப்பா.

எங்கள் அன்பு தெய்வமே உங்கள் ஆத்மா சாந்திபெற மனமுருகி இறைவனை என்றும் வணங்குகின்றோம்.

18-04-1993 (நாளை) ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

65, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (4708)

மனைவி, பிள்ளைகள்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9057

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9652, 41-1227, 42-2323, 27-1292 24-7628, 28-7662, 26-2827, 41-8449, 24 5416, 24-8353, 26-3528, 26-2391, 27-5823, 42-7312, 27-0849, 26-7949, 42-9326, 24-6475, 42-1320, 24-5703, 26-4792, 28-1627, 27 9764, 24-7087.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8751, 41-9038, 24-4323, 26-2654, 42-3239, 27-6821, 24-5029, 26-3473, 71-4984.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மலை திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மேலும் திருக்கோணமலையிலிருந்து ஏற்றி வரக்கூடிய பொருள்களைக் கொண்டுவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கிளை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவு படுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

தனது சேவையை கந்தர்மடம், அரசடிவீதி அங்கர் பார்மஸியில் விற்பனைப் பிரிவை

**18-4-1993**

பகல் 12-00 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

எமது சுவைமிகு தரமான உணவுப் பார்சல்களை பகல் 11-30 மணிமுதல் வழங்குகின்றது.

பல்கலைகழக மாணவர்கள், மற்றும் கந்தர்மடம், திருநெல்வேலி இந்துக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்துள்ள பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

| | | |
|---|---|---|
| மீன் | - | 29 50 |
| இறைச்சி | - | 29 50 |
| மரக்கறி | - | 24-50 |

அத்துடன் எவ்வகையான ஓடர்களையும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை.
சுண்டுக்குளி.

(சி-6446)

விற்கு விஜயம் செய்தமை இலங்கை - இந்திய உறவில் நெருக்கம் ஏற்பட்டுள்ள

### ஆயிரக்கணக்கான

களின் இணையத் தலைவர் திரு கணேசலிங்கத்திடம் மகஜர் ஒன்றை கையளித்தது.

தொடர்ந்து றக்கா வீதியூடாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தைவந்தடைந்தது அங்குவைத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் வதிவிட பிரதிநிதியிடம் மகஜரைக் கையளித்தபின் தொடர்ந்து சென்று இறுதியாக யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

அங்குவைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

மகஜர்களைப் பெற்றுக் கொண்ட அனைவரும் அவற்றைஉரியநேரத்தில் உரியஇடங்களுக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தனர்.

### இனப்பிரச்சினை

உடனிருந்தார்.

முன்னதாக கலாநிதி கிளார்க்ஸன் ரெதமர் டி. பி. விஜேதுங்க, வெளியுறவு அமைச்சர் ஹரல்ட்ஹேரத், இராஜாங்க அமைச்சர் ஜோன்அமரதுங்க. ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர்களுடன் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

### கண்ணி வெடியில்

அறிவிப்பு விடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் வீரப்பன் மேட்டூர் அருகே உள்ள மணல்மேடு என்ற பகுதியில் உள்ள கிராமத்துக்கு வந்து சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

களும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீர்வுகள் எதையும் இலங்கை மீது திணிக்க இந்தியா விரும்பவில்லை இதற்கு கடந்தகாலங்களில் உலக அரங்கில் இந்தியா கற்றுக்கொண்ட பாடமே காரணம் என்றும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளுக்குப்பின் தற்போது இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா விளங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தவறாது சமுகம் தரவும்

இன்று மு ப 10-00மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் மேதினம் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### பொதுக் கூட்டம்

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 9மணி தொடக்கம் பகல் 1-30 மணிவரை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## எறிகணைத் தாக்குதல்

(தென்மராட்சி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து புதனன்று இரவு 10 மணியளவில் மாசார், கரந்தாய்ப் பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றதாக தெரியவருகின்றது. இதேவேளை கிளாலி கடற்பரப்பிலும் நேற்று முன்தினம் அதிகாலை 5 30 மணியளவில் பீரங்கி, துப்பாக்கி சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தது. இதன் சேத விபரங்கள் அறியமுடியவில்லை. (86)

### செஞ்சிலுவை

கின்றோம் என்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை ஆட்சியாளர்களின் இந்த கொடூரமான செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்துவங்களை இலங்கை அரச இயந்திரம் உண்மையான முறையில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்று கோரும் அம் மகஜரில் மேலும் தமிழ் பிரதேசத்தில் இலங்கை அரச படைகளால் ஜெனீவா பிரகடனத்தை மீறும் செயல்களை சர்வதேச சமுதாயத்திற்கு தெரியப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் ரிஷாங்கசர்மா குகதாஸ் சர்மா

ஊரெழு மேற்கு குகதாஸ் சர்மா-கமலா தம்பதிகளின் புதல்வன் செல்வன் ரிஷாங்கன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இவரை வர்த்தலை விளான் மருதடி விநாயகர், வேலணை துறையூர் முருகன் அருளால் சகல கலைகளையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, காயத்ரி, மைத்ரேயி, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார். மற்றும் சகோதரர் சகோதரிகள், மச்சான், மச்சாள்மார் வாழ்த்துகிறார்கள். (4711)

v) Building Quantity

3. **City and Guilds of London Examination Year 93/94**

i) Quantity Surveying
ii) Electricals electronic Engineering Technician

Part I & II
Subjects i) Engineering Science & Circuits
ii) Power
iii) Electronic

★★ Qualification : G. C. E. (O/L)

Part III
Subjects i) Advance Electrical Technology
ii) Generation Transmission & Distribution of Electrical Energy

ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★★ Qualification: Part II சித்தி எய்தியோர்மட்டும்.

4. **Special English Classes**
இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

5. **TOEFL**
(Test of English as a Foreign Language)
Duration ; 4 Months

6. **Short Hand and Typing[English]**
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

7. **Motor Mechanism**
மோட்டார் வாகனம் திருத்துதல்
காலம் : 6 மாதங்கள்

8. **Motor Winding**
மோட்டார் வைண்டிங்
காலம் ; 4 மாதங்கள்

9. **Electrical Wiring**
மின்சார இணைப்பு காலம் 3 மாதங்கள்

10. **General Electrician**
ஜெனரல் எலக்ரீஸியன் காலம் 4 மாதங்கள்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

1) அடிப்படை மின்சாரம்(AC/DC - Basic Electricity
2) மோட்டார் வைண்டிங் - Motor Winding
3) Armature Winding - Armature Winding
4) வீட்டு மின்னிணைப்பு - House Wiring
5) எல்லா விதமான மின் உபகரணங்களும்பழுது பார்த்தல், இயக்குதல் - Repairing of All type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கட்கு:

பதிவாளர்,
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar,
Patrician Institute of Higher Studies,
59, St- Patricks Road,
Jaffna.

### வாகன தகுதிச் சான்றிதழ் – 1993

### FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE – 1993

1993 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன தகுதிச் சான்றிதழ் திரு. A.S. குணசீலன் (Automobile Engineer) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Registrar: **Patrician Industrial Institute,**

59, St. Patricks Road JAFFNA. (சி-6113)